11வது ஆண்டில்

# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059

416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 DECEMBER 15, 2001 பாலம் 24

[hole]டிய வரவு செலவுத் திட்டம் (பக்கம் - 13)

பொய் சொல்லுபவர்களை அறிந்து கொள்ள (பக்கம்-2)

பாவையர் நோன்பும் திருவெம்பாவையும் (பக்கம் - 15)

யாவேஸ் விளையாட்டுக் கழகத்தின் சாதனை! (பக்கம்-6)

புதுவருடத்தில் வட்டி வீதங்கள் (பக்கம் - 17)

சமூகத்தில் பெண்கள் நிலை (பக்கம் - 08)

வேலையை இழந்த ருபி? (பக்கம் - 12)

மனித இனம் தோன்றிய கிரகம்? (பக்கம் -04)

தலைவனுக்குத் தோழியின் அறிவுரை (பக்கம்-09)



உலக தமிழோசை வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நத்தார் நல்வாழ்த்துக்களை தெரவுத்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்!

*-Vlambaram Publications*

## உன்னை அறிந்தால்

அண்மையில் பன்னிரண்டாவது அரசியல் தேர்தல் ஸ்ரீலங்கா என அழைக்கும் இலங்கையில் பல இ[hole]ல்கள், இடைஞ்சல்கள், அடிதடிகள், சுடுபாடுகள், கொலலைகள், மிரட்டல்கள் இன்னும் பற்பல... இவற்றிற்கு இடையில் நிறைவேறியுள்ளது. நடக்குமா, நடக்காதா என இரண்டும் கெட்டான் நிலையிலிருந்து ஒருவாறு தேர்தல் நடைபெற்று முடிந்தது. ஒரு வருடத்தினுள் மற்றைய தேர்தல் நடைபெற்றுள்ளது. இது ஸ்ரீலங்கா அரசின் ஸ்திரமற்ற நிலைமையையே காட்டுகின்றது. சுதந்திரம் பெற்று 53 வருடங்களில் பன்னிரண்டு தேர்தல்கள் ஸ்ரீலங்கா சந்தித்துள்ளது. இவற்றினுள் இதுவே மிக மோசமான நேர்மையற்ற ஊழல்கள் மலிந்த தேர்தல் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். தேர்தலை நடாத்த தேர்தல் ஆணைக் குழு இருந்தால் அதனை சுதந்திரமாக இயங்க விடுதல் வேண்டும். அதனைத் தவிர்த்து இதில் அரசியலாளர்கள் தலையிடுவது சரியா? அதற்கு அப்புறமும் நேர்மையான தேர்தலை எவ்வாறு எதிர்பார்க்கலாம்.

கனடாவில் நடக்கும் தமிழர் நிகழ்ச்சிகளிற்கு பொலீஸ் உத்தியோகத்தர்களை காவலிற்கு வைப்பது போல, ஸ்ரீலங்காவில் தேர்தல் நடாத்த வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவை கொண்டு வரவேண்டியுள்ளது. இந்த நாடு, இந்த நாட்டு அரசியல் எங்கு தான் போகின்றது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

☞ மானுடவர்க்கத்தை நேசிப்பவனே கடவுளை நேசிக்கிறான். அத்தகையவன் தனக்கென வாழ்தல் கிடையாது.

☞ போர் என்பது ஒரு சிலரை மட்டும் கொல்லும். போக வாழ்வோ ஒரு சமுதாயத்தையே அழித்துவிடும்.

☞ மனசாட்சியின் ஆதரவைப் பெறுபவர் இறைவனது அனுமதியைப் பெறுபவர் ஆகின்றனர்.

☞ பேசாதிருப்பதால் ஒருவன் முனிவனாய் விட முடியாது. பேதையனும் பேசாது இருந்து விடலாம். கேட்டைக் களைந்து நலத்தை நாடுபவனே முனி.

☞ மனிதன் படைத்திருக்கும் நலன்கள் யாவும் அவன் மௌன முற்றிருந்த போது வந்தமைந்தவைகளாம். மௌனமாயிருக்கத் தெரிந்து கொண்டவளே பாக்கியவான்.

RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

Singapore Communication

- $25.00
- 100 + 50 bonus Min Free
- Fri: 6p.m. - 8a.m. Free
- C/F C/W Free - Messaging Pack &
- Call ID Free For (3) Months
- Free Gift Available in Store

416 - 740 - 5292
416 - 745 - 2378 (Sathi/Raj)
Hot Line: 416 - 866 - 9700



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



London Life

☞ Auto
☞ Home
☞ R.R.S.P
☞ Life
☞ Disability
☞ Mutual Fund
☞ Group Insurance
☞ Child Education
☞ Travel ☞ Business

LIBERTY MUTUAL.

© 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (94)

-விஜே குலத்துங்கம்

கடந்த சில இதழ்களில் குற்றவியல் சம்பந்தமான விடயங்கள் பற்றிப் பார்த்தோம். இந்த இதழில் மேலும் சில விடயங்கள் பற்றிப் பார்ப்போம். உலகில் பொய் பேசாத மனிதர்களே கிடையாது. சில வேளைகளில் சில நன்மை தரும் விடையங்களுக்காகப் பொய் பேச வேண்டி வரும். நாம் பொய் கூறிக் கொண்டு கனடாவில் நுழைந்தோம். வீட்டில் கணவன் மனைவியிடமும் மனைவி கணவனிடமும் பெற்றார் பிள்ளைகளிடமும் தொழிலாளி முதலாளியிடமும் பொய் பேச வேண்டி வருகின்றது. உலகிலேயே பொய் சொல்வதில் கெட்டிக் காரர்கள். வேறு நாடுகளுக்காக ஒற்றர் வேலை செய்யும் *Spy* எனப்படுவர்கள். *Robert Hansen* என்பவர் 25 வருடங்களாக அமெரிக்காவின் தேசிய துப்பறியும் நிறுவனமாகிய *FBI* எனப்படும் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தவர். இதில் கடைசி 15 வருடங்கள் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார். ஒரு புறத்தில் அமெரிக்கத் துப்பறியும் நிறுவனத்தில் வேலை பார்த்து முக்கிய ஆவணங்களையெல்லாம் பார்வையிட்டு. மறு புறத்தில் ரஷ்ய அரசாங்கத்திற்காக ஒற்றர் வேலை செய்து வந்தார். பின்னர் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பிடிபட்டார். இவர் மீது 15 குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு. பின்னர் இவற்றை அவர் ஒத்துக் கொண்டார். இந்த 15 வருடங்களும் எத்தனையோ பொய்களை இவர் கூறியிருப்பார்.

சில வேளைகளில் ஒருவர் பொய் பேசுகின்றாரா என்பதை அவரைப் பார்த்துக் கண்டு பிடித்து விடலாம். ஒருவர் முழிக்கும் முழியை வைத்தும் அவருக்கு வியர்வை கொட்டுவதை வைத்தும் வாய் குழறுவதையும் வைத்து அவர் பொய் சொல்லுகின்றார் என்பதைக் கண்டு பிடிக்கலாம். ஆனால் சிலர் பொய் கூறும் போது அவரைப் பார்த்து ஒன்றுமே கூற முடியாது. அவ்வளவுக்கு மிகவும் இயல்பாக தயங்காமல் பொய் பேசுவார்கள். ஆனால் வெளியில் தெரியாமல் உடலின் உள்ளே சில மாற்றங்கள் பொய் பேசும் போது ஏற்படும். குற்றவியலில் *Lie Detector* எனப்படும் பொய் சொல்வதைக் கண்டுபிடிக்கும் இயந்திரத்தை உபயோகிக்கின்றார்கள். இந்த இயந்திரம் ஒருவர் பொய் பேசுகின்றாரா என்பதை நேரடியாக கண்டு பிடிக்கமாட்டாது. ஆனால் பொய் பேசும் போது உடலில் ஏற்படும் சில மாற்றங்களை அளப்பதன் மூலம் பொய் பேசுகின்றாரா இல்லையா என்பதை தீர்மானிக்கின்றார்கள்.

இந்த *Lie detector Polygraph* என்றும் அழைப்பார்கள். இந்த சாதனம் உடலில் ஏற்படும் மாற்றங்களை அளக்கின்ற ஒரு மருத்துவ சாதனமாகும். இதன் போது ஒருவரின் இரத்த அமுக்கம் சுவாச வீதம் மற்றும் கைகள் விரல்கள் வியர்ப்பது போன்றவற்றை அளப்பார்கள். முதலில் ஒருவர் சாதாரண நிலையில் இருக்கும் போது அளவீடுகளை எடுத்து. பின்னர் கேள்விகளைக் கேட்கும் போது பதில் கூறுகையில் அளவீடுகளில் ஏற்படும் வித்தியாசங்களைக் குறித்துக் கொள்வார்கள். இந்த *Lie detector* அல்லது பொய் பேசும் இயந்திரத்தின் மூலம் அளவீடுகளை எடுக்க முன்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுபவருக்கும் பரசோதனைகளுக்கும் இடையில் ஒரு சுமுகமான நிலையை உண்டு பண்ணி. சந்தேக நபரை சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஏறக்குறைய 1 மணித்தியாலத்திற்கு சம்பாஷனை நடைபெறும். இதன் போது கருவிகள் எதுவும் இணைக்கப்பட்டு இருக்காது. பரிசோதகர் குறிப்பிட்ட குற்றம் பற்றிய சந்தேக நபரின் கருத்துக்களை அறிந்து கொள்வார். இந்த சம்பாஷனை சந்தேக நபரை சாதாரண நிலைக்கு கொண்டு வரவும் இவரைப் பற்றிய ஒரு ஆரம்பக் கணிப்பீட்டை செய்து கொள்ளவும் முடியும். இரண்டாவது அங்கமாக பரிசோதகர் கேட்க வேண்டிய கேள்விகளைத் தயாரிப்பார். மூன்றாவது அங்கமாக *Lie detector* உபயோகித்து சந்தேக நபரிடம் கேள்விகளைக் கேட்டு. பதிவுகளைச் செய்வார்கள். இந்தப் பரிசோதனையின் போது 10 அல்லது 11 கேள்விகளைக் கேட்பார்கள். இதில் 3 அல்லது 4 கேள்விகள் தான் குற்றம் சம்பந்தமாக இருக்கும். மற்றைய கேள்விகள் *Control* அல்லது கட்டுப்பாட்டுக்குரிய கேள்விகளாகும். இவை ஒருவரின் சாதாரண நிலைக்கும் பொய் சொல்லும் போதும் உள்ள வித்தியாசத்தை அறிய உதவும்.

பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அளக்கப்படும்

**1. சுவாசிக்கும் அளவு:** இதற்கு நெஞ்சைச் சுற்றி ஒரு இரப்பர் குழாயையும் வயிற்றைச் சுற்றி இன்னுமொரு இரப்பர் குழாயும் பொருத்தப்படும். சுவாசிக்கும் பொழுது வயிறும் நெஞ்சும் விரிவடையும் போது. இரப்பர் குழாயில் அழுக்கம் கூடும் பொழுது இது இயந்திரத்தால் அளக்கப்படும்.

**2. இரத்த அழுத்தம்:** இரத்த அழுத்தம் அல்லது இரத்த அமுக்கம் கையின் மேற் புறத்தில் ஒரு கவசம் பொருத்தப்பட்டு அளக்கப்படும். பொய் கூறும் போது அமுக்கம் அதிகரிக்கும் எனக் கூப்படுகின்றது.

**3. வியர்க்கும் அளவு:** விரல்களில் வியர்க்கும் அளவு அளக்கப்படும் விரல்களின் நுனிகளில் தான் உடலில் கூடியளவு பெரிய வியர்வைத் துவாரங்கள் உள்ளன. *Galvanometer* எனப்படும் விரல் தகடுகள் பரிசோதிக்கப்படுபவரின் இரண்டு விரல்களில் பொருத்தப்படும். விரல்களினூடாக கடத்தப்படும் மின்சாரத்தின் அளவு அளக்கப்படும். வியர்க்கும் அளவு கூட ஈரத் தன்மை கூடுவதால் கூடியளவு மின்சாரம் கடத்தப்படும்.

சில இயந்திரங்கள் கை. கால்களின் அசைவை அளக்கும். ஒருவர் பதட்ட மடைந்தால் கை. கால்கள் வழமையை விட கூடுதலாக அசையும். பரிசோதனையின் பின்பு. எடுக்கப்பட்ட பதிவுகளைப் பரிசோதகர் ஆராய்வார். *Lie detector* ஒருவர் பொய் சொல்லுகின்றாரா என்பதை நேரடியாகக் காட்டமாட்டாது. ஆனால் பொய் சொல்லும் போது ஏற்படும் பக்க விளைவுகள் அதாவது உடலில் ஏற்படும் சில மாற்றங்களையே அளவிட்டு அதிலிருந்து தான் பொய் சொல்லுகின்றாரா என்பதை ஊகித்துக் கொள்கின்றார்கள். இதனால் தான் இதன் முடிவுகள் நீதி மன்றங்களில் சாட்சியமாக எடுக்கப்படுவதில்லை. ஆனால் ஒரு சந்தேக நபரின் மேல் உள்ள சந்தேகத்தை வலுப்படுத்த அல்லது நிரபராதியை விடுதலை செய்ய உதவுகின்றது. ஆனால் இதில் இருந்து தப்பக் கூடியவர்களும் இருக்கின்றார்கள். சிலர் இந்தப் பரிசோதனையின் போது களவாக சில மயக்க மருந்துகளை உபயோகிப்பதன் மூலம் பதட்டப்படாமல் சாதாரண நிலையில் இருக்க உதவும். சிலர் விரல்களில் வியர்க்காமல் இருக்க. *Deodorant* ஐ பூசிக் கொள்வார்கள். நாக்கை அல்லது உதட்டைக் கடிப்பதன் மூலமும் உண்மையான தாக்கத்தைக் காட்டாமல் இருப்பார்கள் எனவே *Lie detector* உம் சில வேளைகளில் பொய் பேசக் கூடியதாக உள்ளது.



அடுத்த இதழில் கையெழுத்து மோசடிகள் பற்றியும் அவை எவ்வாறு கண்டு பிடிக்கப்படுகின்றன என்பதையும் பார்ப்போம்.

****************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - *361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2* என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு *e-mail* ஐ எழுதி அனுப்பவும்.

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 125

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | ■ |
| | ■ | | ■ | 3 | ■ | ■ | 4 |
| | ■ | ■ | 5 | ■ | ■ | 6 | ■ |
| | | 7 | ■ | | | | 8 |
| ■ | ■ | | ■ | | ■ | | 9 |
| 10 | | | ■ | | 11 | ■ | |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| 12 | ■ | 13 | | 14 | | | |

**இடமிருந்து - வலம்**

1. பாரதப் போர் நடைபெற்ற இடம்
4. மலர்
5. சோலை
7. ஊர்வன ஒன்று (வல - இட)
8. மிகுதி (வல - இட)
9. நிலம் (வல - இட)
10. நீர் வாழ் பிராணி ஒன்று
11. மூன்று பக்கமும் தரை சூழ்ந்த கடல் (வல - இட)
13. தொண்டு

**மேலிருந்து - கீழ்**

1. சேய்
2. தோழி
3. புதினம் (கீழ் - மேல்)
6. வலிமை
7. விசுவாசம்
8. தனிமை
12. சோறு வடித்த நீர் (கீழ் - மேல்)
14. நிச்சயமாய் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் DECEMBER 28, 2001க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | த | ரா | ட் | டி | ன | ன் |
| ன | ■ | லை | ■ | ■ | ■ | ■ | ■ |
| க | ■ | மு | ள் | மு | ரு | க் | கு |
| ர | ■ | றை | ■ | றை | தி | ■ | க் |
| ன் | வா | ■ | சை | ■ | ■ | ■ | மு |
| ■ | அ | ந் | த | ரா | க் | ஸ | ■ |
| தி | ■ | ■ | ■ | ச | ■ | ■ | எ |
| ப | ஞ் | ச | பூ | த | ங் | க | ள் |

**124இல் வெற்றி பெற்றோர்**

1) T. Vadivel. Toronto. Ont.
2) S. Tharshini. Toronto. Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!


* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*

*[Ken-Mark Plaza]*

**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாடடில சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்க[illegible] பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**



**பூட்டு? சாவி?**

**KEERTH LOGSMITH**

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தாமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

**416-439-3709 Pager: 375-7330**

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## உன்னை அறிந்தால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்கே போய் முட்டப் போகின்றதோ? உலக நாடுகள் தங்கள் பயணத்தை வேறு திசையில் செலுத்திக் கொண்டு இருக்கும் இக்காலகட்டத்தில் அரசியல் கோமாளிகள் நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டு இருக்கிறார்கள். நல்ல எண்ணத்திலோ, கெட்ட நோக்கத்திலோ ஜே. ஆர். ஜெயவர்த்தனா வால் கொண்டு வந்த புதிய அரசியல் முறை ஒரு நாட்டிற்கான சிறந்த முறையான தேர்தல் முறை. (சில சில தவறுகளைத் தவிர) அப்படியிருந்தும் இதனை ஒழுங்காக நடைமுறைப்படுத்தாமல் தமது சொந்த அரசியல் இலாபங்களிற்காகவும் தமது அரசியல் நலன்களிற்காகவும் தமது சொந்த இனத்தையே அழிக்கும் மூன்றாம் தர அரசியல் நடாத்தும் அரசியல் தலைவர்களிடமிருந்து எவ்வாறு நேர்மையை எதிர்பார்க்கலாம்? இவ்வாறு அரசியல் நடாத்தும், தலைவர்களிடமிருந்து நியாயமான மனிதாபிமான ஒரு தீர்வை ஒடுக்கப்படும் இனத்திற்கு பெறமுடியுமா? நடைபெறுமா? நடக்குமா? சிந்திக்க வேண்டிய கேள்வி சிந்தித்தால் தெளிவு வரும். சிந்திப்போம்

நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!

-நெற்றிக்கண்ணன்

## விடுகதை

- காலில்லாமல் ஓடி வருவான் கையில்லாமல் பாய்ந்து வருவான் அவன் யார்? நதி
- அவன் ஒருவனே ஆனாலும் நேரத்துக்கொரு உயரம் காட்டுவான் அவன் யார்? உருவம்-நிழல்
- தீயில் சுடப்பட்டவன் திடமானான் அவன் யார்? சுடுசெங்கல்
- இலை தழை கொடிகளுக்கிடையே குதி ரை முட்டை அது என்ன? பூசணிக்காய்
- ஊதினால் பருப்பான் ஊசிக்கு வெடிப்பான் அவன் யார்? பலூன்
- கையில் இருந்தபடி காலம் காட்டுவான் அவன் யார்? கடிகாரம்


தமிழர் நிர்வாகத்தில்


ஒரு

# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது
ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)





சமோசாவிற்கு அழையுங்கள்
T.P 416-332-0944
5 SAMOSA $1.00

Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)
(416) 332-8451
5200 FINCH AVE., SCARBOROUGH

# விண்வெளி



தருபவர் - கனி

## அந்நியார்கள்:- ஏலியன்கள் 73

ஏலியன் தொடர்புகளில் என்னை மிகவும் கவர்ந்த பதிவுகளில் இதுவும் ஒன்று. 1961ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் வட கலிபோர்னியாவின் *Brown mountain* பகுதிகளில் *Ralph Leal* என்பவருடன் ஏலியன்கள் தொடர்பு கொண்டார்கள். அக் காலப் பகுதியில் அம்மலைப் பிரதேசத்தில் வித்தியாசமான வெளிச்சங்கள் அடிக்கடி தோன்றின. இதனைப் பற்றி புலனாய்வு செய்வதற்காக சென்ற *Ralph Leal* க்கு விசித்திரமான அநுபவம் ஏற்பட்டது. அவரது அநுபவத்தைப் பார்ப்போம்.

மலைப் பிரதேசத்தில் இரவில் நடமாடுகின்ற அந்த வெளிச்சங்களின் காரணத்தை அறியச் சென்ற *Leal* இன் மனதில் எழுந்த கேள்விகளுக்கு ஆம் என்பதற்கு மேலும் கீழும் ஆகவும் இல்லை என்பதற்கு பக்க வாட்டிலுமாக அந்த வெளிச்சங்கள் அசைந்தன. ஒரு வெளிச்சம் மலையினுள் மறைந்திருந்த கதவு ஒன்றைச் சுட்டிக் காட்டியது. அக் கதவைத் திறந்து உள்ளே நுளைந்த *Leal* மர்மமான வெளிச்சங்களுக்கான காரணத்தை அறிந்தார். சில அதியுயர் அறிவுள்ள புத்தி ஜீவிகள் அந்த வெளிச்சத்தைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள் திடீரென 'பயப் பட வேண்டாம்! இவ் விடத்தில் எந்தவொரு ஆபத்தும் இல்லை' என்ற குரல் கேட்டது. 8' நீள அகல. உயரமான அந்த தெளிந்த அறையில் அக் குரல் தனக்கு கூறியவற்றை தெளிவாக *Leal* கூறினார். 'மனித இனம் '*Pewam*" என்ற கிரகத்திலேயே முதன் முதலில் உருவாக்கப்பட்டது. அந்த பிவாம் - *Pewam* என்ற கிரகம் இருக்கும் இடத்தில் இன்று பெருமளவு குட்டிக் கிரகங்கள் உள்ளன. அதாவது செவ்வாயிற்கும் வியாழனுக்கும் இடையில் அந்த *Pewam* எனும் கிரகம் இருந்ததாக அவருக்குக் கூறப்பட்டது. இந்த *Leal* ஆல் வெளியே சொல்லப்பட வேண்டும் என்று பணிக்கப்பட்டது.

மீண்டும் ஒரு தடவை அந்தக் கண்ணுக்குத் தெரியாத கதவின் ஊடு அந்த அறையினுள் *Leal* நுளைந்தார். இம் முறை *Leal* அவர்களுடன் 'வெள்ளி' கிரகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இரண்டு நாட்களின் பின் 'வெள்ளி'யை அடைந்த *Leal* அங்கே *Pewam* கிரகத்தின் நேரடி வாரிசுகளைக் கண்டார். மேலும் *Pewam* கிரகம் எப்படி சிதறுண்டு போனது என்றும் பூமியில் ஆரம்பத்தில் மனிதர்கள் எப்படி வாழ்தார்கள் என்பதும் படமாகக் காண்பிக்கப்பட்டது.

இந்த ஏலியன் தொடர்பின் வானியல்களின் இரண்டு புதிர்களுக்கு விடை கொடுக்கப்பட்டுள்ளது. இன்னமும் ஆய்வாளர்களை திணறவைக்கின்ற இந்த இரண்டு விடயங்களும்; எவ்விதம் வியாழனுக்கும் செவ்வாயிற்கும் இடையில் பல்லாயிரககணக்கான குட்டிக் கிரகங்கள் தோன்றின; எங்கே மனித இனம் முதலில் தோன்றியது.

வியாழனுக்கும் செவ்வாயிற்கும் இடையில் இருந்த கிரகம் ஒன்று வெடித்துச் சிதறியே அவ்விடத்தில் ஏராளமான குட்டிக் கிரகங்கள் பல்வேறு வடிவில் அப் பகுதியில் சூரியனை வலம் வருகின்றன என்பது ஒரு கருதுகோள். மேலும் இந்தக் குட்டிக் கிரகங்களில் அமினோ அமிலங்களில் சுவடுகள் இருக்கின்றன என்பதும் ஆய்வாளர்களின் அபிப்பிராயங்களில் ஒன்று இவ்விரண்டையும் இணைத்து *Leal* இன் ஏலியன் தொடர்பை பார்த்தால் மனித இனம் *Pewam* என்ற உடைந்து சிதறிய கிரகத்தில் தான் தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ஆனால் *Leal* இன் *Alien Contact* விடயம் எவ்வளவு நம்பகத் தன்மையானது என்பது தான் ஆய்வாளர்களின் கூற்று. மேலும் இந்தச் சம்பவத்தை எவ்விதம் ஆதாரமாக தமது கூற்றுக்கு வைக்கலாம் இந்தச் சம்பவமும் ஒரு *Alien Contact* பதிலாகவே பதியப்பட்டுள்ளது.

இன்னமும் பலரது *Alien Contact* இல் பல விடயங்கள் வெளிவந்துள்ளது. அவர்களது கூற்றுப்படி பிரபஞ்சத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏலியன்கள் தொடர்பு கொண்டிருக்கின்றார்கள். அவர்களது உருவங்கள் வெவ்வேறு வடிவில் இருந்திருக்கின்றன. வெவ்வேறு கலக்சிகளில் இருந்து அவர்களது பிரயாணங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை வரும் நாட்களில் பார்ப்போம்.

நாடு முழுவதிலும் ஏன் உலகு முழுவதிலும் கூட நத்தார்க் கொண்டாட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகள் தொடங்கிவிட்டன. இரவு பலவண்ண நிறங்களில் ஜொலிக்கத் தொடங்கிவிட்டது. இந்த நேரத்தில் அனைவரும் எனது நத்தார் நல்வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.



• • •

**சன்மார்க்க சீலங்கள்**

1) ஏழை - பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வையொழித்து, எல்லோரும் ஒத்த நிலையில் உண்டு, உடுத்தி வாழும் சமதர்ம சமுதாயம் காணல்.
2) பேரின்பப் பெருவாழிவனைப் பெறுவதற்கான வழிமுறைகளை அனைவர்க்கும் உணர்த்துதல்.
3) உயிர்க் கொலை புரிதல், புலால் உண்ணுதல் முதலிய தீயபழக்க வழக்கங்களையொழித்தும், மூடநம்பிக்கைகளைக் களைந்தும் நல்லுணர்வூட்டுதல்.


# Safety Truck
## Training School Ltd.
### Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
14 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**



# Unpaid Bills
## Keeping You Awake At Night?



Government approved programs can help you-bankruptcy not necessary.
* *Obtain debt relief.*
* *Protect your income and house, car and other assets.*
* *Stop nasty calls from collection agencies.*
* *Stop legal action by creditors.*

**Get Peace Of Mind With Qualified Credit Counseling.**


Don't Delay. Call Now.

WEST: ☎ 905-848-0006 Mississauga Office
EAST: ☎ 416 335-3345 Scarborough Office

CBAO

New Immigrants Welcome

**Credit Repairs**
**Business & Personal**
**Loans and Lines**
**Car Loan & Leasing**
**Credit Cards**



*Mortgage*
*Buy, Sell houses*
*Real-Estate Consulting*

**If we can't do it, no one can!**

**Tel : 416-410-5677, 905-275-6644 Fax: 905-275-8503**

**BALAN APPLIANCES**

அனைத்து மின் உபகரணங்களின் திருத்த வேலைகள்

- Stove
- Washer
- Microwave
- Dryer
- Fridge
- Dish Washer

☎: 905-619-3457 Pager: 416-379-1071

THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
( CET )
சீலன். A (சிவா)

**TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836**
email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு **$400 இலவசம்**



...ச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் ...சேமிப்பு திட்டம். (R.E.S.P)

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

**TWO YEARS DIPLOMA** ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.


இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறின் பல்
அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
**ரவி நடராஜா**



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள

**Accident & Traffic Ticket**
(13 Years Insurance Claims Experience)

Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

Tel: (416) 755-2801
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.

# விளையாட்டுத் தகவல்கள் (89)

-எஸ். கணேஷ்



## 16வது அகவையை நிறைவு செய்யும் யாவேஸ் விளையாட்டுக் கழகம்

*விளையாட்டு தனிமனித வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்த வல்லது. எமது தமிழ் இளைஞர் சமுதாயத்தில் விளையாட்டுகள் மூலம் பல நன்மைகளை எமது இளைஞர்கள் பெறக் கூடியதாக இருக்கின்றது. ஒரு தனி மனிதனின் புகழ் உயரும் போது. அவன் தனது சமுதாயத்தின் புகழையும் மேலோங்கச் செய்கின்றான். சமுதாயத்தின் புகழ் ஓங்கும் போது. தனது நாட்டின் புகழையும் மேலோங்கச் செய்கின்றான். கடந்த பல வருடங்களாக ரொறன்ரோவில் உதைபந்தாட்டம் நடைபெற்று வருகின்றது. எமது தமிழ் சமுதாயத்தில். தமிழ் இளைஞர்கள் அதிக அளவில் பங்கு கொள்ளும் ஒரு விளையாட்டுத்துறை உதைபந்தாட்டம் என்றால் மிகையாகது.*

*இவ் வரிசையில் கடந்த 16 வருடங்களாகத் தொடர்ந்து உதைபந்தாட்டத்தில் தலை நிமிர்ந்து சிறந்து விளங்கும் ஒரு விளையாட்டுக் கழகம் யாவேஸ் விளையாட்டுக் கழகமாகும். உண்மையிலேயே யாவேஸ் விளையாட்டுக் கழகம் எமது தமிழ் இளைஞர் சமுதாயத்திற்கு வரலாற்றுக் கடமையாற்றிக் கொண்டு இருக்கின்றது என்றால் மிகையாகாது. ரொறன்ரோவில் விளையாடும் கழகங்களில் முதன்மை இடத்தை வகிக்கும் இவ் யாவேஸ் விளைாட்டு கழகம் அதிகூடிய கழக அங்கத்தவர்களை உள்ளடக்கியது.*

*சென்ற வாரம் 16வது ஆண்டைப் பூர்த்தி செய்யும் முகமாக யாவேஸ் விளையாட்டுக் கழகம் ஒரு குடும்ப கலை நிகழ்ச்சிகள் நிறைந்த இராபோசன விருந்தை மெகா பார்ட்டி மண்டபத்தில் கொண்டாடியது. இதில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுடன் பங்கு பற்றியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இதில் இருந்து விளையாட்டு வீரர்களுடன் மட்டுமல்லாமல் அவர்கள்சார் தம் குடும்பங்களுடன் யாவேஸ் விளைாட்டுக் கழகம் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதைக் காட்டியது. யாவேஸ் தலைவர் திரு. தாஸ் அவர்களின் உரையில் யாவேஸ் விளையாட்டுக் கழகம் விளையாட்டுடன் மட்டும் நின்றுவிடாமல் சிறுவர்களின் கல்வித் துறையிலும் பல முன் ஏற்பாடுகளை வழங்க உத்தேசித் திருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.*




*16 வருடங்களுக்கு முன்பு யாவேஸ் வீதியில் உள்ள ஓர் அறையில் தங்கியிருந்த சில தமிழ் இளைஞர்களால் யாவேஸ் விளையாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. அது மட்டு மல்லாமல் ஒவ்வொரு நாளும் யாவேஸ் பாடசாலை மைதானத்தில் உதைபந்தாட்டப் பயிற்சி எடுப்பது வழக்கம். அதனால் இக் கழகத்திற்கு யாவேஸ் விளையாட்டுக் கழகம் என்று பெயர் சூட்டப் பட்டது. ஆரம்பத்தில் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்த இக் ழகம் விடா முயற்சியால் 90 இன் ஆரம்பத்தில் பல வெற்றிகளை குவிக்கத் தொடங்கியது. இக்கழகத்தின் வெற்றிகளுக்கு முக்கிய காரணம், இவர்களின் நிர்வாகத் திறமையும் ஒழுக்கத்தைச் சிறப்பாக கடைப்பிடிக்கும் தன்மையே ஆகும். இன்று ரொறன்ரோவில் விளையாடும் பல கழகங்களில் ஒழுக்கத்தில் முதன்மை பெற்ற ஒரு கழகம் யாவேஸ் விளையாட்டுக் கழகம் என்றால் மிகையாகாது.*

*இக் கழகம் கடந்த 16 வருடங்களாக பல சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது. முதன் முதலில் ஒன்ராரியோவில் முதல் தர League என T + D League இல் பங்கு பற்றி விளையாடியது. இதன் மூலம் தமிழ் இளைஞர்கள் முதன் முதலில் கனேடிய முதல் தர League க்கு அறிமுகம் செய்து வைத்த பெருமை இக்கழகத்தையே சாரும். 1991ஆம் ஆண்டு ரொறன்ரோவில் நடைபெற்ற சகல இறுதிப் போட்டிகளிலும் வெற்றி கொண்டு சகல Champion கிண்ணங்களையும் வெற்றி கொண்ட பெருமையும் இக் கழகத்தையே சாரும். அது மட்டுமல்லாமல் ரொறன்ரோவில் முதன் முதலில் இறுதியாட்டத்தில் (Final Champion ship) இல் யாவேஸ் A கழகமும் B கழகமும் மோத வைத்த பெருமை யாவேஸ் விளையாட்டு கழகத்தையே சாரும்.*

*இத்துடன் நின்று விடாமல் ஒவ்வொரு தடவையும் ரொறன்ரோவில் இருந்து தமிழர் தெரிவு அணிக்கு வீரர்கள் தெரிவு செய்யப்படும் போது யாவேஸ் விளையாட்டுக் வீரர்களே அதிக அளவு தெரிவு செய்யப் படுவார்கள். அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு முறையும் தெரிவு அணி கனேடிய அணிகளுடன் மோதும் போது யாவேஸ் இரசிகர்கள் பலர் திரண்டு தங்கள் ஆதரவை தமிழர் அணிகளுக்கு வழங்க எப்போதும் தவறுவதில்லை. இவ் வருடம் ரொறன்ரோவில் இருந்து தமிழர் அணி தெரிவு செய்யப்பட்டு ஐரோப்பாவில் சுவிஸ் நாட்டில் தமிழீழ கிண்ணத்திற்கான போட்டிகள் நடைபெற்றது. இக் கிண்ணத்தை ரொறன்ரோ அணியே வெற்றி ஈட்ட தமதாக்கியது. சுவிஸ் நாட்டிற்கு சென்ற அணியிலும் யாவேஸ் விளையாட்டுக் கழகத்தில் இருந்து 4 வீரர்கள் தெரிவு செய்யப் பட்டார்கள். சுவிஸ் நாட்டில் இருந்து வெற்றி வீரர்கள் ரொறன்ரோ விமான நிலையாத்தில் வந்து இறங்கிய போது யாவேஸ் விளையாட்டுக் கழகம் குமரன் விளையாட்டுக் கழகமும் சேர்த்து மேளதாளத்துடன் திறந்த கார்களில் வெற்றி பவனியை ஒழுங்கு செய்திருந்ததை எவரும் மறக்க முடியாது. இப்படி பல சாதனைகளை ஏற்படுத்திய யாவேஸ் விளையாட்டு கழகம் கலாச்சார நிகழ்வுகளிலும் தமிழ் சிறார்களின் கல்வித் துறையிலும் பங்கெடுத்து வருவது மிகவும் வரவேற்கத் தக்கதொன்றாகும். எமது தமிழ் சமுதாயத்தில் மூலவேர்கள் இளைஞர்களே என்பதை ஆணித்தரமாக கருத்தில் கொண்டு அவர்களின் நலத்தை சிறக்க அரும்பாடு பட்டு வரும் இவ் யாவேஸ் விளையாட்டு கழகத்தை 'உலக தமிழோசை' சார்பாக வாழ்க! வாழ்க! என வாழ்த்துவோமாக!*


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற

**VIVEKA PRINTERS**



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

2002ஆம் ஆண்டிற்கான கலண்டர் வெளிவந்து விட்டது.

**80 BARBADOS BLVD., UNIT #4**
**SCARCOROUGH, ONT.**


☎ (416) 410-6401

YARL **WINDOW COVERING**

**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

**CUSTOM MADE..**
- VENETIAN BLINDS
- VERTICAL BLINDS
- ROLLER BLINDS
- PLEATED SHADES
- DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

**FREE ESTIMATE**

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்

*1986ஆம் ஆண்டு வெளிவந்த படங்களின் தொடர்ச்சி*

**1986**

1. அம்மன் கோவில் கிழக்காலே
2. அன்னை என் தெய்வம்
3. அறுவடை நாள்
4. அவளைச் சொல்லிக் குற்றமில்லை
5. அடுத்த வீடு
6. ஆயிரம் கண்ணுடையாள்
7. ஆயிரம் பூக்கள் மலரட்டும்
8. ஆனந்தக் கண்ணீர்
9. ஆப்ரிக்காவில் அப்பு
10. இரவு பூக்கள்
11. இசை பாடும் தென்றல்
12. உயிரே உனக்காக
13. உன்னிடத்தில் நான்
14. உன்னை ஒன்று கேட்பேன்
15. உனக்காகவே வாழ்கிறேன்
16. ஊமை விழிகள்
17. எனக்கு நானே நீதிபதி
18. எங்கள் தாய் குலமே வருக
19. [illegible]ன்றாவது ஒரு நாள்
20. என் சபதம்
21. ஒரு இனிய உதயம்
22. ஒரு மனிதன் ஒரு மனைவி
23. ஓடங்கள்
24. கடைக்கண் பார்வை
25. கடலோரக் கவிதைகள்
26. கண்மணியே பேசு
27. கண்ணத்தொறக்கணும் சாமி
28. கண்ணே கனியமுதே
29. கண்ணுக்கு மை எழுது
30. கரிமேடு கருவாயன்
31. காகித ஓடம்
32. காலமெல்லாம் உன் மடியில்
33. குளிர்கால மேகங்கள்
34. குங்கும பொட்டு
35. கைதியின் தீர்ப்பு
36. கோடை மழை
37. கோயில் யானை
38. சர்வம் சக்தி மயம்
39. சம்சாரம் அது மின்சாரம்
40. சாதனை
41. சினிமா சினிமா
42. சிவப்பு மலர்கள்
43. செல்வாக்கு
44. சோறு
45. சோலை புஷ்பங்களே
46. டிசம்பர் பூக்கள்
47. தர்ம தேவதை
48. தர்மம்
49. தர்ம பத்தினி
50. தழுவாத கைகள்
51 தலையாட்டி பொம்மைகள்
52. தாய்க்கு ஒரு தலாட்டு
53. தொடரும் உறவு
54. நம்பினார் கெடுவதில்லை
55. [illegible]ம ஊரு நல்ல ஊரு

**R. சுந்தரராஜன்**



***அம்மன் கோவில் கிழக்காலே***

*R. சுந்தரராஜனின் கதை, வசனம், இயக்கத்தில் உருவான 'அம்மன் கோயில் கிழக்காலே', 'தழுவாத கைகள்' இரண்டிலும் மாறுபட்ட வேடத்தில் நடித்த விஜயகாந்த் இந்த ஆண்டிற்கான (1986) சிறந்த நடிகர் பட்டத்தை பேசும் படம் இதழின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.*

*'அம்மன் கோயில் கிழக்காலே' படத்திற்கு இசையமைத்தவர் இளையராஜா.*

*கதாநாயகி அந்தஸ்து. பணம், 'நாகரிகம் ஆகியவற்றில் மூழ்கியவள். கதாநாயகன் பண்பு, பாசம், மனிதத்தன்மை உடையவன். அவன் பாட்டுச் சொல்லிக் கொடுப்பவன்.*

*ஒரு நாள் கதாநாயகி தன் காரை வேகமாகச் செலுத்தி அவன அவளுடைய காரை நொறுக்கு கிறான். கதாநாயகி பாட்டுக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு அவனைக் காதலிப்பது போல் பாசாங்கு செய்து அவளை முறைப்படி பெண்கேட்க வரச்செய்து அவமானப்படுத்தி வருகிறாள். அவனும் திட்டம் தீட்டுகிறான். ஊர்ப் பஞ்சாயத்து முன்பு அவனுக்கு கசையடி வழங்கப் படுகிறது. அவளே அடிக்கிறாள். அவன் அவளுக்குப் பலவந்தமாக தாலி கட்டி விடுகிறான். கோபங்கொண்டு அவள் தாலியைக் கழட்டும் சமயம் அவள் தாய் தடுத்து பெண்ணின் நிலையை விளக்கி அவள் அறிவுக்கண்களைத் திறக்கிறாள். கணவன் மனைவியாக அவர்கள் வாழ்கிறார்கள். அவள் தன் கணவன் செய்த கொலைப்பழியை தானே ஏற்றுக்கொள்கிறாள்.*

*இப்படத்தில் விஜயகாந் அடக்கமாக, ஆக்ரோசமாக, பொறுப்பு மிக்கவராகத் திறம்பட நடித்துள்ளார். கதாநாயகி ராதா முதலில் பணக்காரத் திமிர் கொண்ட வளாகவும் பின் மாறுபட்ட சூழ் நிலைக்கேற்ற தன்மைக் கேற்றவாறும் உணர்ந்து நடித்துள்ளார். ஸ்ரீவித்யா தனது அனுபவ நடிப்பை வெளிப படுத்தியுள்ளார். ஆர். சுந்தரராசன் விறு விறுப்பாகவும், திறமையாகவும் கதையைப் படஉருவில் வடித்திருக்கிறார்.*


X-MAS SPECIAL

"EASAN'S TRAVELS"

X-Mas தினத்தை முன்னிட்டு

ஒரு வழிப்பயனம்

30$

இரு வழி கட்டணம் 50$ மட்டுமே

தினமும் மாலை, உங்கள் இல்ல வாசல் முதல் தரிப்பிட வாசல் வரை சேவை செய்யும் ஒரே ஸ்தாபனம் ஈசன் ரவல்ஸ்.

ரொறன்ரோ — மொன்றியல்

December 1st திகதி தொடக்கம்

TORONTO - OTTAWA - TORONTO

| | | | |
|---|---|---|---|
| இலங்கையிலும் | E | ரவல்ஸ் | (941) 504567 |
| மொன்றியலிலும் | A | ரவல்ஸ் | (514) 830-8793 |
| ரொறன்ரோவிலும் | S | ரவல்ஸ் | (416) 803-8798 |
| NEW YORKகிலும் | A | ரவல்ஸ் | 1(866) 430-0866 |
| இப்பொழுது: | | | |
| OTTAWAவிலும் | N | ரவல்ஸ் | (613) 862-8798 |

Thana storesமுன் நின்று புறப்படும்.

தொடர்புகளுக்கு



திருமண சேவை

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவுசெய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்

☎ :416-261-6219

Email:ratnam51@hotmail.com



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்

• ACCIDENT INJURIES

• CRIMINAL

• DOG BITES

• SLIP & FALL

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்

416 490-9199

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன்

416-490-9199

# தூறல்

## "காஞ்சிப் பட்டு உடுத்தி கஸ்தூரிப் பொட்டு வைத்து"

'காஞ்சிப் பட்டு உடுத்தி. கஸ்தூரிப் பொட்டு வைத்து தேவதை போல் நீ நடந்து வர வேண்டும்' - இது ஒரு சினிமாப் பாடலின் முதல் சில வரிகள். ஆண்கள் உலகம் இதனையே பெண்களிடமிருந்து எதிர் பார்க்கின்றது. தேவதை போலத் தோற்றமளிக்க வேண்டும். கண்ணகி போல் வாழ வேண்டும். நளாயினி போல் கணவனை மதிக்க வேண்டும். சாவித்திரி போல் காப்பாற்ற வேண்டும். சீதையை போல் தீக்குளிக்க வேண்டும். அதே புராணக் கதைகளே இன்றைய சினிமா. மற்றும் தொலைக் காட்சித் தொடர்களுக்கு அடித்தளம்.

பெண்ணின் முதல் நிலை கற்பு. இரண்டாவது நிலை குடும்பம். மூன்றாவது நிலை சமூகம். இந்த மூன்று நிலைகளிலும் அவள் தேற வேண்டும். அப்பொழுது தான் இந்த உலகம் அவளுக்கு அந்தஸ்தை வழங்கும். இரண்டாவது நிலையான குடும்பத்தில் பெண் + கற்பு + பிள்ளைகள். இந்த ஆண் அல்லது கணவன் எனப்படுபவன் ஒரு நிர்வாகியாக அல்லது சர்வாதிகாரியாக காணப்படுவார். மூன்றாவது நிலையான சமூகம். பெண் + கற்பு + பிள்ளைகள் + கணவன். இங்கு கணவனுடன் சேர்த்து வாழும் பெண்களுக்கே அந்தஸ்து வழங்கப்படுகிறது.

கற்பு என்ற நிலையில் - ஒழுக்கத்துடன். அவளது உடை அணியும் முறைகளும் கருத்திற் கொள்ளப்படுகிறது. சினிமாவானது ஒழுக்கத்தின் தீவிரத்தை காட்டிய பொழுதிலும் அவளது உடை அணியும் முறைகளில் விட்டுக் கொடுத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் - கவர்ச்சி மிகவும் சிறப்பாக விலை போகும் பொருளாகும். இதற்கு முக்கியமாக ஆங்கிலப் படங்களே அடித்தளமிட்டன. *Young and Restless* என்ற *day time TV* தொடரில் ஒரு பெண் பல ஆண்களைத் திருமணம் செய்து கொள்வார். அதாவது அவளது ஒவ்வொரு திருமணமும் நீடிக்கும் காலம் 1-2 வருடமாகவே இருக்கும். இந்தத் தொடரில் கவர்ச்சி என்பது மிக முக்கிய விடயம் வகிக்கின்றது. இதற்குப் பல படிகள் மேலே போய் *Temptation Island* என்ற *TV* தொடரில் 4 *couples* ஒரு தீவுக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அங்கு சுமார் 13 ஆணழகன்களும் 13 பெண்ணழகிகளும் உள்ளனர். 4 ஆண்களும் தமக்கு விருப்பமான ஒவ்வொரு பெண்ணை 13 பெண் அழகிகளில் இருந்து தெரிவு செய்யலாம். அதே போல் 4 பெண்களும் ஒவ்வொரு ஆணைத் தெரிவு செய்யலாம். போட்டியின் நோக்கம் இந்த 4 ஜோடிகளில் எந்த ஜோடி தமது காதலனுடன். காதலியுடன் திரும்பிச் செல்கிறது என்பதே. முற்று முழுதாக கவர்ச்சி. காமம். பாலுணர்வு வெளிப்படுத்தல் என்பதே பிரதானமாகும். *Blind Date* என்ற மற்றொரு தொடர் ஒரு ஆணும் பெண்ணும் தீடிரென சந்திக்கிறார்கள். அவர்களது அன்றைய நாள் எப்படி அமைகிறது. இறுதியில் அவர்கள் உறவு சொள்கிறார்களா? என்பதே. இதுவும் அடிப்படையில் பாலுணர்வு பற்றியதே. 640 *AM* அலை வரிசையில் நடைபெறும் *Talkshows* பெரும்பாலும் பாலுணர்வு பற்றியவையே.

*'Fire'* என்னும் படத்தில் பெண்ணியப் பிரச்சனைகள் பற்றிப் பேசப்பட்ட பொழுதிலும் பாலியல் காட்சிகளுக்கு முக்கியத்துவ மளிக்கப்பட்டுள்ளது. *Missipi Masala, Kamasuthara* போன்ற இந்திய வம்சாவளியினரால் எடுக்கப்பட்ட படங்களில் கூட பாலியல் காட்சிகள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. **'நந்திதா தாஸ்'** என்னும் நடிகை (*Fire, The Earth* இப்பொழுது தமிழில் அழகி) பாலியல் வல்லுறவுக் காட்சிகளில் நடிக்கும் பொழுது. சுற்றிவரவுள்ள ஆண்களுக்கு (உதவி இயக்குனர்கள். *Light boy, Production Assistants etc, etc*) அது இரசனைக்குரிய விடயம். ஆனால் நடிக்கும் நடிகைக்கு கஸ்டமானது என ஆதங்கப்பட்டுள்ளார் ?

பெண்ணியம் மற்றும் பெண் விடுதலை பற்றிப் பேசிய பல படங்களில் கவர்ச்சி முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. *Bandit Queen* என்னும் படத்தில் நிர்வாணக் காட்சி முக்கியமானது. 'சம்சாரம் அது மின்சாரம்' (இது இந்தியத் தேசிய விருது பெற்ற படம்)? இப் படத்தில் கணவன் மனைவியைப் பார்த்து



'உனக்கு நான் வேண்டுமானால் கொஞ்ச நாள் காத்திரு. என் உடம்பு தான் வேண்டுமானால் நான் இங்கேயே 'செடி' - பெண்ணானவள் ஒரு பாலியல் பிண்டமாகக் காட்டப்பட்டுள்ளது.

சினிமாக சம்பந்தப்பட்ட *Web* தளங்களும் இந்தத் கவர்ச்சியை வெளிக் காட்டத் தவறவில்லை. பிரபல இந்திய தமிழ் நாளிதழான தினகரனின் *Web* தளத்தில் கவர்ச்சிப் படங்கள் பிரபலமானவை. பிரபலமான *Ambalam.com* இதற்கு விதிவிலக்கல்ல. *Webilagm.com.* மற்றும் குமுதத்தின் வெப் தளம் தினமணியின் வெப் தளம் என அடுக்கிக் கொண்டே போகலாம். இதைவிட தனிப்பட்டவர்களின் *Web* தளங்களும் இவ்விணைப்புக்கு வித்திடுகின்றன. கனடாவில் உள்ள பதிவுகள் *.com* போன்றனவும் பிற்போக்குத் தளமான கவர்ச்சிக இணைப்புக்களை தமது *Web* தளங்களில் இணைத்துள்ளன. இதைவிட ஏராளமான நடிகர். நடிகைகளின் தளங்கள் விதிவிலக்காக சில திண்ணை.*com* ஆறாந்திணை.*com*. போன்றன.


நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 10 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair

NTE AUTO INC.
New Trade Engineering

என். ரி. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan
சிவபாலன்

Tel: (416) 750 - 1573

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough


பெண்கள் கவர்ச்சிக்கான. வியாபா்ரத்துக்கான பொருள். இதனை வாங்குபவர்களும் அதிகம் பெண்களே. பெண்கள் ஒரு புறம் கவர்ச்சி, மறுபுறம் அவர்கள் கணவனுக்கு அடங்குபவர்களாகவும் அதற்காகவே பிறவி எடுத்தவர்களாகவும் காட்டப்படுகிறார்கள். இதனையே பெண்களும் உள்வாங்கிக் கொள்கிறார்கள். அதனால் இதிலிருந்து அவர்கள் மீள முடியாது உள்ளது.

**'அஞ்சலி'** படத்தில் வாலி எழுதிய பாடல்

> புருஷனை பாரு - *cooking;* புடவையை *washing, washing*
> மனைவியை பார்த்தா சிவலிங் (?); ஆத்தாடி *husband*ஐ பாரு *sevent boy*
> *Something want something;*

பெண்கள் பாடும் இப்பாடல் பெண்களைக் கேலி செய்கிறது. அதே சமயம் பெண்கள் சமையலுக்கும் சலவைக்கும் ஏற்றவர்கள் என்கிறது.

**'ஏணிப் படிகள்'** - பாடல் வாலி

> கோழிக்கு சேவல் சொந்தம்; குயிலுக்கு ஜோடி சொந்தம்;
> ஆணுக்கு பெண் சொந்தம்

**'லலிதா'** - கண்ணதாசன்

> பெண்ணின் வீடு காலாகாலம்; கணவன் அழைக்கும் வரை...

மேலும்

> மஞ்சள் போனால். திலகம் கலைந்தால்; வாழ்வை இழந்தாளென்பர்
> பள்ளியறையில் இரண்டும் கலைந்தால்; பாவை வாழ்ந்தாளென்பர்'

'தோழிகள்' என்னும் *TV* தொடர் புரச்சிகரமாகத் தொடங்கி. பின்னர் வழமை போல். கண்ணகி. சீதை. சாவித்திரி. நளாயினி என எனமுடிகிறது.

துப்பறியும் நாவல் எழுதும் எழுத்தாளரான பட்டுக்கோட்டை பிரபாகரின் நாவலான 'கனவுகள் இலவசம்' *TV* தொடராகியுள்ளது. இதில் *M.B.A* படித்த பெண் திருமணமானதும் சந்திக்கும் பிரச்சனைகள் அவள் அதிலிருந்து மீள்வதன் மூலம் வெற்றி பெறுவதாக காட்டப்பட்டுள்ளது. அதே போல் 'விதி' என்னும் படமும் இதில் தன்னை ஏமாற்றியவனைக் கோட்டில் வழக்குப் போட்டு தனது பிள்ளைக்குத் தந்தை என நிருபிக்கிறாள். சேர்ந்து வாழுமாறு அவனுக்கு கோட் உத்தரவிட்ட போதும் அவள் தனித்து வாழ்ந்து காட்டுகிறாள். இதற்கு மற்றொரு ஒரு உதாரணம் 'கண்டேன் சீதை'

*Alice Guy Blace* என்ற பெண் 1896இல் *The Cabbage Fairy* என்ற படத்தை தயாரித்தார். நூற்றாண்டு காலமாக ஆங்காங்கே பெண்கள் திரை. *TV* தொடர்களை தயாரிக்கிறார்கள். இதன் பெருக்கமே இப் பெண்ணின குறைபாடுகளை நிவர்த்தி செய்யும். அது மட்டுமல்லாது பெண்கள் தயாரிக்கும் படங்களில் பெண் பாத்திரங்கள் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட வேண்டும். அவளது உரிமைகள் முன் எடுக்கப்பட வேண்டும். இல்லையேல்

> கண்ணகி போல் வாழனும்
> கணவனுக்கு பெருமை சேர்க்கணும்

-வானரன்-



# அன்புத் தமிழ்

- கவிஞர் வி. கந்தவனம்

## இரவில் வர வேண்டாம்!

நிலம் - மலையும் மலை சார்ந்த இடமும் எனப்படும் குறிஞ்சி.
இடம் - தினைப்புனம்.

தினைப்புனத்தைக் காவல் செய்து கொண்டு நின்றாள் அந்தப் பருவ மங்கை.
அவள் எதிரிலே தோன்றினான் ஒரு கட்டிளங் காளை.
கண்கள் பேசின. உள்ளங்கள் இணைந்து கொண்டன.
சந்திப்புகள் தொடர்ந்தன. காதல் வளர்ந்தது.

அன்றொரு நாள் அவளைக் காணவேண்டிப் பகற் பொழுதிலே. வழக்கமாகச் சந்திக்கும் இடத்திலே அவன் ஆவலோடு காத்திருந்தான்.

அ[illegible]ளைக் காணவில்லை. ஏன்? அவளுக்கு என்ன நேர்ந்தது?
அவன் மனம் துடித்தது.

தலைவியின் தோழி வந்து 'தினை முற்றிவிட்டதால் புனம் காக்க வேண்டியதில்லை என்று பெற்றோர் வீட்டில் அவளை இருக்கச் சொல்லிவிட்டனர். அதனால் இனி நீ அவளைப் பகலில் பார்க்க முடியாது' என்றாள். அதற்கு அவன் ''இரவில் சந்திக்க முடியுமோ' என்றான். அதுவும் முடியாது என்னும் வகையில் தோழி அளித்த பதில் இது:

'தலைவியின் தாயோ தன் கண்ணிலும் மேலாக மகள் மீது அன்பு கொண்டவள். தந்தையும் அவளைக் கண்ணும் கருத்துமாகக் காப்பவன். அவள் எங்காவது நடந்து போனாற் கூட. ''சின்ன மகளே. உன் சிறிய அடிகள் சிவக்கும் வண்ணம் எவ்விடம் செல்கிறாய்?' என்று கேட்பவன்.

'யாமோ. பிரிவு என்பதே இல்லாமல் இசைவானதும் குற்றமற்றதுமான நட்பினால். ஓருயிரும் ஈர் உடலுமான பறவை போல அன்புடையவராக இருக்கின்றோம்.

'தினைப்புனம் காக்கும் மகளிர் ஓயாது சத்தமிட்டுத் துரத்துகையில் கிளிகளும் தமது இனத்தைக் கூவி அழைக்கும். பலா மரத்தின் பெரிய கொப்புகளில் அணில்கள் ஆடிக் கொண்டிருக்கும். பெரும் பயன்களாக விளங்கும் பலாப் பழங்களைக் கொள்வதற்குக் குறவர் குடிசை அமைத்திருப்பர். வேங்கை மரங்கள் தேன் மிகுந்த பூக்களைச் சொரிந்து குடிசைக் கூரையை மறைத்திருக்கும்.

'பூ[illegible]ள் மறைத்த குடிசைத் தோற்றத்தைப் புலி என்று நினைத்து புள்ளிமுக யானை அஞ்சி விரைந்து செல்லும். அதன் வேகத்தில் மழைவளம் மிகுந்த பக்கத்து மலைச் சாரல்களில் வளர்ந்துள்ள மூங்கில்கள் முறிந்து சிதையும். 'அவ்விதமான நல்ல மலைநாட்டுக்கு உரியவனே, இரவிலே நீ வருவதாயின் மெல்லிய இயல்புடையை அவள் உனக்கு வரும் ஆபத்துக்களை எண்ணி வருந்தி உயிர் வாழ்ந்திராள்.'



யாயே. கண்ணினும் கடும் காதலளே
எந்தையும் நிலனுரப் பெறா அன். 'சீறடி சிவப்ப
எவன் இல குறுமகள் இயங்குதி' என்னும்.
யாமே. பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே!

ஏனல் அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்
கிளிவிளி பயிற்றும் வெளில் ஆடு பெருஞ்சினை
விழுக் கோட் பலவின் பழுப்பயம் கொண்மார்.
குறவர் ஊன்றிய குரம்பை புதைய.
வேங்கை தா அய தேம்பாய் தோற்றம்

புலிசெத்து வெரீ இய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பில் கழைபடப் பெயரும்
நல்வரை நாட! நீ வரின்.
மெல்லியல் ஓரும் தான் வாழலளே!

-அகநானூறு 12

துவரா நட்பு - கசப்பில்லாத நட்பு
விழுக்கோட் பலவு - பெரிய காய்களையுடைய பலாமரம்
குரம்பை - குடிசை
புலி[illegible]செத்து - புலி என்று நினைத்து
ஒரு[illegible] மெல்லியல் - தீங்குகளை நினைந்து வருந்தும் மென்மை மனம் படைத்த தலைவி (துயர் பொறுக்க மாட்டாதவள்)


யாய் - தாய்
வெளில் - அணில்
தேம் - தேன்
கழை - மூங்கில்

இப் பாடலில் உள்ளுறையாக அமைந்துள்ள பொருளைக் கவனித்தல் வேண்டும். தலைவியின் பெற்றோர் அவள் மீது மிகுந்த அன்புடையவராக இருப்பதால் அவள் விருப்பத்துக்கு மாறாக நடக்கமாட்டார்கள். அப்படி இருக்க. அஞ்சக் கூடாத குடிசைக்கு அஞ்சும் யானைபோல நீ வீணாக அவள் பெற்றோருக்கு அஞ்சுகின்றாய். யானை மூங்கில்களை நாசம் செய்வது போல மூங்கிலை ஒத்த தோள்களையுடைய மெல்லியளாகிய உன் தலைவிக்கு நீ பிரிவுத் துன்பத்தை விளைவிக்கின்றாய். எங்களுக்கும் கவலையை அளிக்கின்றாய். நீ இரவில் வருவதை அவள் விரும்பவில்லை..

இவ் விதம் தோழி கூறுவதனால். 'களவகா வந்து சந்திப்பதை விடுத்து ஊர் அறிய உன் காதலியைத் திருமணம் செய்து கொண்டு முறையாகக் குடும்பத்தை நடத்து' என்று தலைவனுக்கு அவள் குறிப்பாக உணர்த்துக்கின்றாள் என்பது பொருள்.



ACTION HONDA

புதிய பழைய
HONDA, VOLVO
மற்றும் CHRYSLER
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service

இந்த மாதம் மட்டும்
2.8% Financing for All
New 2001
CRV ( In Stock Only)



Call me Now!! 416-704-1179

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்
Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough





யோகா சோதிடம்



★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்
☎: (416) 299-8361

ELECTRICAL REPAIRS



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

2002ஆம் ஆண்டின் புதிய பட்டுத் தெரிவுகள் எதிர்வரும்
நத்தார், புதுவருட, தைப்பொங்கல் தினங்களை முன்னிட்டு

# Neelam Silk

வழங்கும்

## வருடாந்த சிறப்பு மலிவு விற்பனை

**ஒரே ஒரு நாள் மட்டும் ONLY ONE DAY**

**SPECIAL SALE**

காலம்:- DECEMBER 2001 - 25 *Christmas Day*

## இடம்

***Tuxedo Sangamam***
(ரொக்ஜூடோ சங்கமம் மண்டபம்)
***42 Tuxedo Court, Scar.***
***(Markham Road &Ellesmere)***



***Time: 10AM - 10PM***
***12 Hours Only***

சேலைகளுடன் 2002இற்கான லங்கா சூட், பஞ்சாபி சூட் வகைகள் சகல வயதினருக்கும் கிடைக்கும்

**ஆண் களுக்கான**

- பான்ஸ்
- சேட்
- T.சேட் வகைகள்

**மற்றும்**

- மேசை விரிப்புகள்
- மெத்தை விரிப்புகள்
- குளிர்கால போர்வைகள் (Blankets)
- **Imitation Jewellery**
  **Fancy Neclace** வகைகள்

இவை மட்டுமல்ல எழுத்து வடிவில் எழுதமுடியாத எண்ணற்ற தெரிவுகள் இம்மலிவு விற்பனையில் இடம் பெறுகின்றன.

இந்தியாவில் அறிமுகம் தரு[illegible]
2002இற்கான அனைத்து வகை[illegible]
[illegible]ட்டுகளும் இம் மலிவு விற்பனையில்
[illegible]ங்களுக்கு அறிமுகம்
தருகிறார்கள்.

**அனைத்து வகை பட்டுத் தெரிவுகளும்**

**30% → 60%** வரை சிறப்பு தள்ளுபடி விலைகளி[illegible]

இம் மலிவு விற்பனையில் கலந்து கொள்ளும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெறும[illegible]
மிக்க பரிசில்களும் வழங்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**சிறுவர்,
சிறுமியர்க்கான
சிங்கார ஆடை
வகைகள்**

இத்துடன் எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



மேலதிக தொடர்புகட்கு:
**நீலம் சில்க்**
*1453 Gerrard St., East*
*Toronto, Ont.*
☎: *(416) 778-7455*

* **நீலம் சில்க்**
* *2378, Eglinto Ave., Eas[t]*
*Scarborough Ont.*
* ☎: *(416) 759 - 2002*

SALE SALE SALE SALE SALE SALE SALE SALE SALE

கிறிஸ்துமஸ், புதுவருடம், தைப்பொங்கல் ஈழத்தமிழர் இனிய கொண்டாட்டங்களை முன்னிட்டு

# மகாராஜாஸ் வழங்கும்

## பிரமாண்டமான SAREE CLEARENCE SALE

**காலம்: 14 DECEMBER வெள்ளிக்கிழமை முதல் இரண்டு வாரங்கள்**

**$10.00, $15.00 $20.00, $25.00, $30.00றக்கு**
**அனைத்து உயர்ரக பட்டுப் புடவைகளும்**

## 50% OFF விலைகளில்

கலியாண முகூர்த்தப் புடவைகளும் விசேட கழிவு விலைகளில்

இவ்வாண்டின் இறுதிச் சந்தர்ப்பம்
இனி ஒரு முறை இல்லை இந்த இறுதிச் சந்தர்ப்பம்

**உங்கள் அதிர்ஷ்டம் தொடங்கும் நாள் டிசம்பர் 14**
**வெள்ளிக்கிழமை தொடர்ந்து 2 வாரங்கள்**

2001ம் ஆண்டின் அதிர்ஷ்டகரமான நாட்களை உங்களுக்கு உரித்தாக்க திரண்டு வரும் எம் மக்களுக்காக விஸ்தரிக்கப்பட்ட வாகனத் தரிப்பிட வசதிகள்



**$60.00 பெறுமதியான அனைத்து பல்லவி, தெனாலி, இதயா, FANCY EXCLUSIVE SAREES அனைத்தும் (With Blouse)**

**$19.99**

